**நான் ஏன் ஒரு அடிப்படை சேமிப்பு வங்கி கணக்கு திறக்க வேண்டும்?**

- வங்கியில் சேமிக்கப்படும் பணம் பாதுகாப்பாக இருக்கும்.
- நீங்கள் வங்கியில் சேமிக்கப்படும் பணத்திற்கு வட்டி கிடைக்கும்.
- நீங்கள் எப்போதும், எங்கு வேண்டுமானாலும் அவசர தேவைகளுக்கு வங்கி கணக்கிலிருந்து பணம் எடுத்துக் கொள்ளலாம்.
- நீங்கள் ஒரு வங்கி கணக்கு திறந்த பிறகு கடன் மற்றும் வைப்பு நிதி போன்ற சேவைகளை வங்கியிலிருந்து பெற முடியும்.

**ஒரு அடிப்படை சேமிப்பு வங்கி கணக்கின் நன்மைகள் என்ன?**

அடிப்படை சேமிப்பு வங்கி கணக்கிற்கு குறைந்த பட்ச நிலுவைத் தொகை எதுவும் தேவை இல்லை ஆகவே கணக்கு தொடங்குவதற்கு ஆரம்ப கால தொகை செலுத்த தேவையில்லை. பணத்தை எப்போது வேண்டுமானாலும் தேவைப்படும் போதெல்லாம் வங்கி கணக்கில் போடவோ எடுக்கவோ செய்யலாம்.

**எப்படி நான் என்னுடைய ஏடிஎம் / டெபிட் (RuPay) அட்டை பயன்படுத்த முடியும்?**

ஒரு ஏடிஎம் / டெபிட் (RuPay) அட்டை கணக்கு தொடங்கும் சமயத்தில் வழங்கப்படும். நீங்கள் விரும்பும் போது இந்த அட்டையை உபயோகித்து எந்த வங்கி ஏடிஎம் லும் 24 X 7 நாட்களிலும் எடுத்துக் கொள்ளலாம். உங்கள் கையில் ஏடிஎம் இருப்பதால் நீங்கள் எப்போது வேண்டுமானாலும் பணம் எடுத்துக்கொள்ளலாம். நீங்கள் இந்த அட்டை பயன்படுத்தி வணிக நிறுவனங்கள் / கடைகளில் பொருட்கள் அல்லது சேவைகள் பெறமுடியும். மேலும், இந்த அட்டைக்கு ரூ 1.00 லட்சம் மதிப்பிலான உள்ளடிக்கிய விபத்து காப்பீடு உள்ளது.

**இந்த கணக்கில் ஏனைய வசதிகள் யாவை?**

தாங்கள் கணக்கில் திருப்தியான வரவு செலவு 6 மாதங்கள் செய்திருந்தால் வங்கியானது முதலில் ரூபாய் 1000 வரை மிகைப்பற்று வழங்க பரிசீலனை செய்யப்படும். மிகைப்பற்றுக்கான வட்டியை ஒழுங்காகக் கட்டும் பட்சத்தில் வங்கியானது மிகைப்பற்றுக்கடனை ரூபாய் 5000 வரை உயர்த்த வாய்ப்புள்ளது.

**நான் ஒரு கணக்கு தொடங்கிய பிறகு என்னென்ன சேவைகளைப் பெற முடியும்?**

- நிலையான மற்றும் தொடர் வைப்பு நிதி
- கிஸான் கடன் அட்டை
- பயிர் கடன்கள், டிராக்டர் கடன்கள் மற்றும் மற்ற விவசாய உபகரணங்கள் கடன்கள்.
- பணம் அனுப்பும் வசதி

**நான் என் வங்கி சேமிப்பு கணக்கில் என்னுடைய ஆதார் எண்ணை இணைக்க முடியுமா?**

ஆம், ஆதார் எண்ணை உங்கள் சேமிப்பு கணக்கில் இணைக்க முடியும். மற்றும் ஆதார் அடிப்படையில் பெறப்படும் மானியங்களான, சமூக பாதுகாப்பு ஓய்வூதியம் (SSP), சமையல் எரி வாயு (LPG) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் (MGNREGA) நேரடியாக இந்த கணக்கில் வரவு வைக்கப்படும். அரசு மானியத்தை பெற ஆதார் எண்ணை வங்கியிலும் மற்றும் குறிப்பிட்ட அரசுத் துறையிலும் கட்டாயம் கொடுக்க வேண்டும்.

**கணக்கு த்துவங்க தேவையான ஆவணங்கள் எவை?**

சேமிப்பு கணக்கு துவங்குவது மிகவும் எளிதானது ஆகும். தாங்கள் அடையாள சான்று மற்றும் முகவரி சான்று சமர்ப்பித்து, குறிப்பாக ஓட்டுனர் உரிமம்,பாஸ் போர்ட், தொலைபேசி ரசீது, மின் கட்டண ரசீது மற்றும் வாக்காளர் அடையாள அட்டை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்ட அட்டை, ஆதார் எண் அட்டை அல்லது பஞ்சாயத்து தலைவரரால் வழங்கப்படும் சான்று மூலம் நீங்கள் சேமிப்பு கணக்கு தொடங்கலாம்.